# விவசாய தொழில்நுட்பத் தகவல்

விவசாய தொழில்நுட்ப தகவல்களை விரிவாக்க அலுவலர்களிற்கு மிக விரைவாக வழங்கும் ஒரு கையேடு

விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு

தொழில்நுட்ப பிரசுரம் இலக்கம் 09 - 2020 பெப்ரவரி








ஆபிரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட ஆக்கிரமிப்புப் பூச்சியைப் பற்றி தற்போது சர்வதேசமே கவனஞ் செலுத்தி வருகின்றது. விலங்கியல் வல்லுனர்களின் கருத்தின் படி 300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாக கருதப்படும் இந்த பூச்சி இனம் வெட்டுக்கிளி என்று அழைக்கப்படுகின்றது. தற்போது உலகின் பேசுபொருளாக மாறியுள்ள இப்பூச்சியானது வெட்டுக்கிளி இனங்களில் மிகவும் ஆபத்தான "பாலைவன வெட்டுக்கிளி" (Dessert Locust) என இனங் காணப்பட்டுள்ளது. இது 5 சென்றி மீற்றரை விடக் குறைவான நீளமுடையது. ஓதொப்தெரா (Orthoptera) வருணத்தில் எக்ரிடிடே (Acrididae) குடும்பத்தைச் சேர்ந்த பல பாலைவன வெட்டுக்கிளி இனங்களில் ஆபிரிக்க கண்டத்தில் அதிகளவு சேதத்தை ஏற்படுத்துவது ***Schistocerca gregaria*** எனும் வெட்டுக்கிளியாகும். பொதுவாக பாலைவன வெட்டுக்கிளிகள் சஹாரா பாலைவனம், அரேபியா, ஆசியாவின் சில பகுதிகள் ஆகியவற்றிற்கே மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இப்பிரதேசங்கள் பல நூற்றாண்டுகளாக பாலைவன வெட்டுக் கிளியின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு வந்துள்ளன. உலக மக்கள் தொகையில் பத்தில் ஒரு பகுதியினரின் வாழ்க்கை இத்தகைய தீங்கு விளைவிக்கும் பூச்சிகளினால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான தாக்கத்தை இட்டு நாமும் கவனமாக இருந்து இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தோ, பாக்கிஸ்தான் எல்லையில் தற்போது வசிக்கும் வெட்டுக்கிளிகள் அருகிலுள்ள நாடுகளுக்கு குடிபெயரும் அபாயம் பற்றி உணவு, விவசாய நிறுவனம் கடந்த பெப்ரவரி 3ம் திகதி வெளியிடப்பட்ட புதிய அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. அவர்களின் கணிப்பின் படி இன்னும் சில மாதங்களில் வெட்டுக்கிளியின் குடித்தொகை 500 மடங்காக அதிகரித்தால் இதுவரை அடைய முடியாத இடங்களை அடைவதற்கும் வாய்ப்புண்டு. எதிர்பாராத காற்றினால் இவ் வெட்டுக்கிளிகள் வட இந்திய ராஜஸ்தான் பிராந்தியத்திலிருந்து தெற்கு நோக்கி நகரத் தொடங்கும். இது இலங்கைக்கு அச்சுறுத்தலாக அமையும்.

காற்றின் உதவியுடன் அவை ஒரு நாளைக்கு குறைந்தது 150 கிலோ மீற்றர் தூரத்திற்கு இடம் பெயர்கின்றன. சில நேரங்களில் இவற்றால் கடல் மட்டத்திலிருந்து 2000 மீற்றர் உயரத்திலும் பயணிக்க முடியும். இலங்கையில் தற்போது காணப்படும் ஒரு பீடையாகக் கருதப்படுகின்ற "மஞ்சட் புள்ளி வெட்டுக்கிளி" தென்னோலைகளை பெரிதும் சேதப்படுத்துகின்றது.

இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக விவசாயத் திணைக்களத்தின் தாவரப் பாதுகாப்புச் சேவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.




இவை மண்ணின் உள்ளே முட்டைகளை இடும். சுமார் 10 நாட்களில் இவை பொரித்து குஞ்சுகள் வெளியேறும். மூன்று வாரங்களில் இவை ஐந்து அணங்குப் பருவங்களை கடந்து நிறையுடலி வெட்டுக்கிளிகளாக மாறும். அணங்கு நிலையிலுள்ள வெட்டுக்கிளிகளுக்கு நன்கு வளர்ந்த சிறகுகள் காணப்படாது. எனவே அவற்றால் நிறையுடலியாக மாறும் வரை பறக்க முடியாது. அவை தரையிலுள்ள புற்கள், சிறிய புதர்கள் என்பவற்றில் வாழ்கின்றன. மில்லியன் கணக்கான வெட்டுக்கிளிகள் முட்டையிடுவதன் மூலம் சுமார் ஐந்து வாரங்களுள் கோடி கணக்கான புதிய வெட்டுக்கிளிகள் உருவாகின்றன. அவை ஒரு வருடத்தில் குறைந்தது ஐந்து தலைமுறைகளையாவது உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை.

இந்த பூச்சிகள் விரைவாக உணவை உட்கொள்ளும் திறனைக் கொண்டிருப்பது மற்றுமொரு சிறப்பம்சமாகும். அவை ஒரு நாளில் அவற்றின் இரண்டு கிராம் உடல் நிறைக்கு நிகரான அளவில் உணவை உட்கொள்வது வழக்கமாகும். உட்கொள்ளப்படும் உணவு வகை கட்டுப்பாடின்றியது. கண்களுக்குத் தென்படும் அனைத்துத் தாவரப் பாகங்களையும் உணவாக உட்கொள்ளும். இலை, தண்டு, பூ, காய், விதை என்பன மட்டுமன்றி மரத்தை மூடியுள்ள பட்டையையும் உட்கொள்ளும். அத்தோடு புற்களையும் உணவாக உட்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக தங்கள் இனத்தையே உண்பது இப்பூச்சிகளின் சிறப்பியல்பாகும்.

இரசாயனங்களை விசிறுவதன் மூலம் நிறையுடலிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையானது உலகலாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கட்டுப்பாட்டு முறையாகும். பீடைநாசினித் திரவங்களை விசிறுவதற்காக உலங்கு வானூர்திகள் (ஹெலிகொப்டர்), ஆளிலில்லா விமானங்கள் (ட்ரோன்கள்) கூடப் பயன்படுத்தப்படுகின்றன. பீடைநாசினிகள் மூலம் சூழலில் சேரும் நச்சுக்களின் அளவை குறைப்பதற்காகவும், ஏனைய உயிரினங்களுக்கு தீங்குகள் ஏற்படாமலிருக்க பீடைநாசினிகளை தெரிவு செய்வதில் மிகவும் கவனஞ் செலுத்த வேண்டும்.

இது போன்ற நவீன தொழிநுட்பங்களுடன் கூடிய உரிய பீடைநாசினிகளையும், உரிய நடைமுறைகளையும் இனங்கண்டு அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். பாலைவன வெட்டுக்கிளி தொடர்பான தகவல்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு அறியப்படுத்தவதற்காக விவசாயத் திணைக்களமானது தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும் பாலைவன வெட்டுக்கிளிகளுக்காக இந்தியாவில் இயங்கும் பாதுகாப்பு பொறிமுறையில் பணி புரியும் அதிகாரிகளுடன் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தி, இந்நிலைமைப் பற்றி விழிப்புடன் செயற்பட பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

அந்நிய வெட்டுக்கிளிகள் சூழலில் படையெடுத்தால் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களிற்கு அறிவிக்க வேண்டியது விவசாய சமூகம் உள்ளிட்ட பொதுமக்கள் தரப்பினதும் கடமையாகும்.

அவ்வாறான அறிவிப்பொன்று கிடைக்கப் பெற்றால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள விவசாயத் திணைக்களத்தின் தாவரப் பாதுகாப்புச் சேவை தயாராக உள்ளது. வெட்டுக்கிளிகள் தமது இளமைப் பருவத்தில் தரையிலே வசிக்கும். எனவே அவை புற்களை உணவாக உட்கொள்வதால் மிகக் கவனமாக அவற்றை அவதானிப்பது அவசியமாகும்.

**பிரதி : சனத் எம்.பண்டார – உதவி விவசாய பணிப்பாளர்**

**தொழிநுட்ப தகவல் : கலாநிதி தயானி பெரேரா – மேலதிகப் பணிப்பாளர்**

**தாவரப் பாதுகாப்புச் சேவை, கன்னொறுவை.**

**தமிழாக்கமும், கணணி வடிவமைப்பும் : லிசோதா செல்வராஜ்,**

**தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை**

**மேற்பார்வையும், ஆலோசனைகளும்**

**எஸ்.பெரியசாமி, பணிப்பாளர்**

**ஜ.எஸ்.எம். ஹலீம்தீன், உதவி விவசாயப் பணிப்பாளர்**

**தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை**